Vol. 5, Issue-1, June 2021 P.No. : 20 - 28

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**முனைவர் ஆ. சந்திரன்,**
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்.

---

**தலைப்பு :** இருத்தலியல் நோக்கில் புதிய வெயிலும் நீலக் கடலும்

---

**முன்னுரை**

படைப்பாளனை நீக்கிவிட்டுப் படைப்பை மையமாகக்கொண்டு வாசிக்கும் முறை இன்று தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிக்கொண்டுள்ளது. அதாவது, வாசகனின் பார்வைக்கு ஏற்ப அவனுடைய ஆளுமைக்கு ஏற்ப ஒரு படைப்பை அணுகும் முறை சமீபகாலமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. படைப்பு / படைப்பாளன் x வாசகன் என்ற நிலை மாறி, படைப்பு x வாசிப்பு என்ற இடத்திற்கு விமர்சனப் பார்வைச் சென்று கொண்டுள்ளது. ஒரு படைப்பை அணுகுவது எவ்வாறு என்பது குறித்த கூர்மையான பார்வையை இன்றைய விமர்சனப் பார்வை முன்னெடுத்து வருகிறது. படைப்பில் உள்ள நுட்பமான பொருளை அறிந்து கொள்வதே இந்த நவீன வாசிப்பு முறையின் நோக்கம். தற்போதைய சூழலில் படைப்பும் x விமரிசனமும் எதிரானதாக இருந்த

*நிலை மாறி படைப்பும் / விமரிசனமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த ஒன்றாக இன்று வளர்ந்துள்ளது. இலக்கணம் கொண்டு இலக்கியம் படைக்கப்பட்டதா? அல்லது இலக்கியத்தை வைத்துக்கொண்டு இலக்கணம் படைத்தார்களா? என்று பழைய சிந்தனையை நாம் இந்த இடத்தில் நினைத்துப் பார்க்க வேண்டும். ஏனெனில் இன்றைய படைப்பு உருவாக்கம் என்பது விமர்சன பின்புலத்திலிருந்து வந்துகொண்டிருப்பது என்பது தவிர்க்க இயலாத ஒன்றாக மாறிவிட்டது. படைப்பாளர்கள் x விமர்சகர்கள் (அல்லது ஆய்வாளர்கள்) என்ற நிலை மாறி படைப்பாளர்கள் / ஆய்வாளர்களாகவும் ஆய்வாளர்களே படைப்பாளர்களாகவும் இருக்கிற இன்றைய சூழலில் படைப்பும் / விமரிசனமும் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாத கதம்பமாக மாறி உள்ளது எனலாம்.*

*அதனால் புதிய சிந்தனைகளை மையமாகக் கொண்டு புனைவுகள் உருவாக்கும் என்பது நிகழ்கிறது. நவீன விமர்சனங்கள் நவீன கோட்பாடுகள் கொண்டு புனைகதைகள் எழுதிப் பார்க்கப்படுகின்றன. அதாவது நவீன கோட்பாடுகள் இலக்கியத்தில் பொருத்திப் பார்த்தல் என்பது ஒருபுறம் நிகழ மறுபுறம் நவீன கோட்பாடுகளை எழுதிப் பார்த்தல் என்ற ஒன்றும் நிகழ்கிறது. அப்படிப்பட்ட ஒரு எழுதிப்பார்க்கும் முயற்சியின் ஒரு பிரதியே 'புதிய வெயிலும் நீலக் கடலும்' என்ற நாவல் எனலாம். இந்த நாவல் இருத்தலியல் என்ற சிந்தனையைப் புனைவாக மாற்றியுள்ளது. அதாவது சோரேன் கீர்க்கேகார்ட் தன்னுடைய நூலான இது / அது (Either / or ) என்ற நூலில் சொல்லப்படும் விவாதத்தின் புனைவாக்கமாக இந்த நாவல் உள்ளது உள்ளது எனலாம். அது எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் குறித்து ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கம் ஆகும்.*

***சோரேன் கீர்கேகார்ட் இருத்தலியல் சிந்தனை***

*இருபதாம் நூற்றாண்டில் உருவான கோட்பாடுகளில் ஒன்று இருத்தலியல் கோட்பாடு. சோரன் கீர்கேகார்ட், பிரடரிக் நீட்சே போன்றவர்களால் உருவாக்கப்பட்ட இந்த சிந்தனை மார்ட்டின் ஹைடேகர், கார்ல் ஜாஸ்பெர்ஸ், காப்பிரியல் மார்செல்லால், ஜீன் பால் ஸார்த்தர் போன்றவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டது. இவர்களில் ஹைடேகர் மற்றும் கார்ல் ஜாஸ்பெர் ஆகிய இருவரும் டானிஷ்*

*தத்துவவாதி சோரன் கீர்கேகார்ட்டின் செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ‘வாழ்க்கை என்பது அபத்தமானது. அதற்கு அர்த்தங்கள் என்று எதுவும் இல்லை. ஆனால் அபத்தங்கள் நிறைந்த என்ற வாழ்க்கைக்கு நாம் அர்த்தம் கற்பிக்க வேண்டும் என்பதே இவர்களின் கோட்பாடு. இருத்தலியல் கோட்பாடு இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கோட்பாடாக திகழ்ந்தது. அதனுடைய வேர்கள் ஸார்த்தரிலிருந்து கீர்கேர்கார்ட் வழியாக சாக்ரடீஸைச் சென்றடைந்தன’1*

*சோரன் கீர்கேகார்ட்டிற்கு மனித இருத்தலியலின் சிக்கல் ஒரு முக்கியக் கருவாக இருந்துள்ளது. அவர் முதல் இருத்தலியலாளராக கருதப்பட்டு வந்திருந்தார். மேலும் "இருத்தலியலின் தந்தை"2 எனவும் அழைக்கப்பட்டு வந்தார். அபத்தம் நிறைந்த மனித வாழ்வின் மீதான பார்வையைத் தன்னுடைய நூலான இது / அது (Either / or ) 18433 விரிவாக எழுதியுள்ளார்.*

***இது / அது (Either / or )***

*மகிழ்ச்சி, துக்கம், வெறுப்பு, சோகம், அவஸ்தை, முதலான பல்வேறு இருப்புக்களை ஒவ்வொரு கணமும் அனுபவிப்பது மனிதவாழ்வின் இயல்பாகும். வாழ்க்கை வாழ்வதற்கே! என்று வாழ்வது என்பது ஒருபுறம். இப்படிதான் வாழ்வது என்று ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு அதிலிருந்து விலகாமல் வாழ்வது! என்பது மறுபுறம். இவ்வாறான முரண்பட்ட கொள்கைகளின் பின்புலத்தில் மனிதனின் வாழ்க்கை முறை அமைந்திருப்பதை நாம் பார்க்கலாம். சோரேன் கீர்க்கேகார்ட் தன்னுடைய நூலான இது / அது (Either / or ) என்பதில் கூறுவது போல மனிதனின் வாழ்க்கை என்பது அறவியல் வாழ்க்கை மற்றும் அழகியல் வாழ்க்கை என்பது போலத்தான் இது அமைகிறது எனலாம். இது / அது (Either / or ) என்ற அந்த நூலின் முதல் பாகமானது ‘இது’ (எய்தர்) இளைஞனால் எழுதப்பட்டது போலக் கட்டமைக்கப்பட்டுள்ளது. ‘அழகியல் நிலையில் வாழ்க்கையைப் பார்த்து அதிலிருந்து அதிகபட்ச இன்பத்தைப் பெறுவது எவ்வாறு என்பதை அந்த இளைஞன் கூறுகிறான். இந்த பகுதியில் காம சுவைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆண் - பெண் உடலுறவு, பெண்களை வசியம் செய்தல் குறித்த பகுத்தாய்வுகள் செய்யப்படுகின்றன’4 இதையே ‘புதிய வெயிலும் நீலக் கடலும்’ என்ற நாவலும் பிரதிபலிக்கிறது. நாவலின் முக்கிய பாத்திரமாக*

விளங்கக்கூடிய லதாவின் காதலனாக அறிமுகமாகும் கோபால் சோரேன் கீர்க்கேகார்ட் தன்னுடைய நூலான இது / அது *(Either / or )* என்பதில் கூறும் இளைஞனைப் போல உள்ளான். லதா பேராசிரியை, நடிகை எனப் பல பெண்களை தன்னுடைய வலையில் விழ வைக்கிறான். இது ஒருபுறம் சொல்லப்பட மறுபுறம் நாவலின் தொடக்கம் முதல் இறுதிவரை பல்வேறு கதாபாத்திரங்களின் மூலமாக இந்த காமச் சுவை மிகுந்த செயல்பாடுகளும் அதனால் ஏற்படும் விளைவுகளும் சொல்லப்படுகின்றன. மேலும் அப்படிச் சிதைந்த குடும்பங்களில் முக்கிமானது வேலு குடும்பம். வேலு – மருமகள் (ராமுவின் மனைவி) ஒழுங்கற்ற பாலியல் உறவின் விளைவாக உள்ளது. விரும்பியோ (வேலு) விரும்பாமலோ (ராமு மனைவி) நடைபெற்ற மாமனார் மருமகள் இடையிலான உறவின் விளைவாக ராமு, சேகர், லதாவின் எதிர்காலம் நாசமாகிறது.

ஒருபுறம் மனநலம் அற்றவனாக்கிச் சோமுவின் வாழ்க்கையைச் சிதைத்து அழித்துவிடுகிறது. இரண்டாவது மகன் சேகரை ஒழுக்கம் அற்றவனாக விபச்சாரனாக மாற்றுகிறது. கடைசியில் லதாவையும் அந்த தாக்கம் விட்டுவைக்கவில்லை. ஓர் ஆணின் பாலியல் அதிகாரத்திற்கு அந்த குடும்பமே தண்டனை அனுபவிக்கிறது. தன் உடல் இச்சையின் ஒழுங்கற்ற செயலால் குடும்பம் சிதைகிறது என்பதைக் காலம் கடந்து வேலு உணர்ந்தாலும், குடும்பத்தின் சிதைவை மீட்டமைக்க முடியாமல் போகிறது. குடும்ப உறவில் ஏற்படும் இத்தகைய ஒழுங்கற்ற பாலியல் உறவின் விளைவுகளைக் கேள்விக்குள்ளாக்குகிற கதையாடல்களாக வேலு – மருமகள், ராமு, சேகர், லதாவின் கதை நீள்கிறது.

**இது / அது (Either / or ) - மூன்று வாழ்க்கை**

சோரேன் கீர்க்கேகார்ட் தன்னுடைய நூலான இது / அது *(Either / or )* என்ற நூலில் மனிதனின் வாழ்க்கை அழகியல் நிலை வாழ்க்கை *(aesthetic Life)*, அறவியல் நிலை வாழ்க்கை *(Ethical life)*, கையறுநிலை *(despair)* என அமைகின்றன என விளக்குகின்றார்.

**அழகியல் நிலை வாழ்க்கை (aesthetic Life)**

*'அழகியல் நிலை வாழ்க்கை என்பது வாழ்க்கை எப்படி கிடைக்கிறதோ அதை அப்படியே அனுபவித்து மகிழ்வது. திட்டவட்டமான ஈடுபாடு ஏதும் இல்லாமல் வாழ்வது; இத்தகைய வாழ்வு பொருளற்றது; குளத்தில் எறியப்படும் கல் போன்றது; மேலிருந்து கீழ் நோக்கி செல்லும் அலைகளின் நடனத்தால் கொஞ்சம் கொஞ்சமாகத் தாங்கி பிடிக்கப்படும் இந்த கல், நடனம் ஓய்ந்ததும் இருளில் மூழ்கிவிடும். இத்தகைய பிரச்சனையை வரும்போது, மனிதன் எவ்வாறு துயரம் அடைகிறான் என்பதே அனைத்தும் சார்ந்துள்ளன. நிலையற்ற, எல்லைக்குட்பட்ட எதையாவது அவன் அழைக்கட்டும். ஆனால் எதுவும் அவனைக் காப்பாற்ற முடியாது. குழந்தை முழுக்க முழுக்க அழகியல் நோக்கம் உடையது அந்த நொடியில் ஏற்படும் மகிழ்ச்சியை வேதனையில் ஐயோ வாழ்கிறது அந்த நொடிக்காக மட்டுமே வாழ்பவர்களும் உண்டு இவர்கள் தான் விரைவில் துயரத்துக்கும் ஆளாகிறார்கள்''5*

*வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற வேட்கை. உணர்ச்சியின் உந்துதலினால் முடிவெடுப்பது. வாழ்க்கை பற்றிய போதிய அனுபவம் இன்மை. அந்த பொழுதின் தேவைக்கு ஏற்ப வாழ்தல் என்ற சிந்தனை கொண்டவளாக லதா நாவலில் அடையாளப்படுத்தப்படுகிறாள். லதாவின் அந்தப் பேராசை அவளைத் திருமணத்திற்கு முன்பு கர்ப்பவதியாக மாற்றுகிறது. தன்னுடைய வயிற்றில் வளரும் கருவை அழித்துவிடும் அவள் மீண்டும் காதலனான கோபாலனை அடைய வேண்டும் என்று விருப்பம் கொள்கிறாள் (ப.167). இவ்வாறு ஓர் உறுதிப்பாடு இல்லாதவளாக நாவல் முழுமைக்கும் அவளது கதை ஊசலாட்டம் போடுகின்றது. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற எவ்வித குறிக்கோளும், வாழ்வின் மீதான பிடிமானமும் இன்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தால் போதும் என்ற நிலையில் வாழ்பவர்களாக லதாவின் தாத்தா வேலு, லதாவின் காதலன் கோபால் - சுநய்னா, செல்வம் - மனைவி மற்றும் மச்சினி, காவல்துறை உயர் அதிகாரியான சிவலிங்கம், தோழர் கண்ணகி - (கணவர் சின்னசாமி) - கந்தன், கோத்தாரி, கிருபாகரன் – மெகருன்னிகா என ஒரு நீண்ட பட்டியல் நாவலில் இடம் பெற்றுள்ளது. இவர்களின் வாழ்க்கை குழப்பங்கள், பேராசைகள், சுயநலம் போன்றவை நிறைந்ததாக உள்ளது.*

***அறவியல் நிலை வாழ்க்கை (Ethical life)***

*இது / அது (Either / or ) என்ற 'அந்த நூலில் இரண்டாம் பகுதியான அது (or ) வில் கீர்க்கேகார்ட் இன்னொரு பாத்திரம் வகிக்கிறார். அதாவது, அழகியல் நிலை' வாழ்க்கையை நடத்தும் இளைஞனை விட வயதில் மூத்த அவனது நண்பர் எனும் பாத்திரம். அந்த நண்பர் அவனுக்கு அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கும் கடிதங்கள் எழுதுகின்றார். ஆனால் அந்த கடிதங்களில் உள்ள விடயங்கள் மிகவும் காத்திரமானவை. 'அறவியல் நிலை வாழ்க்கையில் (Ethical life) திருமணம் செய்து கொண்டு மனைவியிடம் மட்டுமே காதல் செலுத்தும் வாழ்க்கையில் மனசாட்சிக்கும் கடமைக்கும் பணிந்து செயல்களை மேற்கொள்ளும் வாழ்க்கையில் கிடைக்கும் பேர் இன்பங்களை அவன் புரிந்து கொள்ளும்படி செய்ய மெல்லமெல்ல முயற்சிக்கிறார்'6. நிதானம், எதையும் யோசித்து முடிவெடுப்பது, வாழ்க்கை பற்றிய புரிதலைக் கொண்டிருப்பது, நேர்மையாக இருப்பது என்ற பின்புலத்தில் அசோகராஜன் அடையாளப்படுத்தப்படுகின்றான். 'ஒருவிரல் தொடலிலும் கற்பு உள்ளது (ப.20)' என்ற சிந்தனை கொண்டவனாகவும், சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைக்கக் கூடியவராகவும், தன்னுடைய பிரச்சனை பொருட்டு போராட ஒன்று கூடியவர்கள் செய்த தவறுகளுக்காக வருகிற அளவுக்கு உயரிய பண்பாளராகவும் (ப.241), எந்தச் சூழலிலும் யாரையும் எதிர்பார்த்து வாழக்கூடாது (ப.169, ப.196) என்ற உறுதிப்பாடு கொண்டவனாகவும், வாழ்க்கையை மிகவும் நேர்மையாக வாழவேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பு உள்ளவனாகவும் அதற்காக பல்வேறு இன்னல்களைத் தொடர்ந்து அனுபவித்து வந்தாலும் தன்னுடைய உறுதிப்பாட்டைச் சற்றும் குறைத்துக் கொள்ளாத தளராத மனம் படைத்தவனாகவும் சித்தரிக்கப்படுகிறான். மேலும், லதாவிற்குத் தொடர்ந்து ஆறுதல் கூறுகின்ற நபராகவும், ஆலோசனை சொல்லுகிற நண்பனாகவும், தோழனாகவும், அவளுடைய இன்ப துன்பங்களில் தொடர்ந்து பங்களித்து வருகிற ஒருவனாகவும் இருக்கிறான்.*

*சுருக்கமாக சொல்வதானால் அசோகராஜன் அது (or ) வில் கீர்க்கேகார்ட் சித்தரிக்கும் பாத்திரம் எனலம். அதாவது, வாழ்வின் இரு எதிரெதிர் (அறவியல் நிலை x அழகியல் நிலை ) பண்புகளைக்*

*கொண்டவர்களாக இவ்விருவரையும் (அசோகராஜன் x லதா) இரு மையப் பாத்திரங்களாகக் கொண்டு இந்த நாவலின் கதைப் பின்னப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களைப் போல இவர்களுக்கு இணையான பண்புகள் கொண்டவர்களாக மேலும் பல பாத்திரங்கள் நாவலில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, பைரவன் சாமி என்கிற முனுசாமி - முனியம்மாள் (அசோகராஜனைவிட மேலான அறவாழ்வு வாழ்பவராகச் சுட்டப்படுதல்), தோழர் அய்யாவு, திருநாவுக்கரசு - சந்திரா போன்றவர்கள் அசோகராஜனுக்கு இணையானவர்களாக உள்ளனர். இவர்கள் வாழ்வில் குறிப்பிட்ட இலக்கைத் தேர்வு செய்துகொண்டு அந்த இலக்கை நேர்மையான வழியில் அடைய முயல்கின்றனர்.*

***கையறுநிலை (despair)***

*வாழ்க்கையின் மூன்றாவது கட்டம் என்பதை விளக்குகையில் கையறுநிலை எனும் கருத்தைக் குறித்து கீர்க்கேகார்ட் விளக்குகிறார். ‘அழகியல் நிலை வாழ்க்கை வாழ்பவன் சாவை நேருக்கு நேர் சந்திக்காமல் இருக்கலாம். ஆனால், சாவு எனும் பின்னணி இசை தனது வாழ்க்கையில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அவனது வாழ்க்கையை, அவனது ஆளுமையை ‘ஒழித்துக்கட்டிவிடும்’ மரணம் அவனையும் அச்சுறுத்தத்தான் செய்கிறது. எனவே அவனுக்கு ‘மனமுறிவு’, ‘கையறுநிலை’ ஏற்படத்தான் செய்கிறது. ‘அறவியல் நிலை’’ வாழ்க்கையை வாழ்பவனுக்கும் இந்த ‘கையறுநிலை’ ஏற்படுகிறது. ஆனால், அறவியல் நிலை வாழ்க்கை வாழ்பவன் இந்த நம்பிக்கை இழப்பைத் தாங்கிக் கொண்டே செல்ல, உயர்ந்த அழகியல் நிலை வாழ்க்கையை வாழ்பவனோ, அந்த கையறு நிலையை முதலில் உணர்ந்தாலும் பின்னர் தன்னிச்சையாக அதிலிருந்து தன்னை முடித்துக் கொள்கிறான்’7’*

*அசோகராஜனுக்கு ஏராளமான பிரச்சனைகள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தாலும், அவன் அவற்றைத் தொடர்ந்து சமாளித்து விடுகிருகிறான். எந்த ஒரு சூழலிலும் அவன் தன்நிலை மறந்து துன்பத்தில் உழன்று போகவில்லை. ஆனால் லதா அப்படி அல்ல. ஒவ்வொரு பிரச்சினையை அவள் எதிர்கொள்கிற போதும் செய்வதறியாது கலங்கி விடுகிறாள். அத்துடன் அவளுக்குச் சிறிய*

வயதிலிருந்தே தொடர்ந்து துயரத்தின் ஓலம் கேட்டுக்கொண்டே இருப்பதாக கதை நகர்வு அமைந்துள்ளது. இவ்வாறு அறவியல் வாழ்க்கை வாழ்கிற அசோகராஜன் அழகியல் வாழ்க்கை வாழும் லதா ஆகிய இரு கதாபாத்திரங்களும் கையறு நிலையை எதிர்கொள்வதாகவும் நாவலில் சித்தரிக்கப்படுகிறது.

## முடிவுரை

மேற்கண்டவற்றை நாம் பார்க்கிற பொழுது புதிய வெயிலும் நீலக் கடலும் என்ற நாவலானது இருத்தலியல் சிந்தனையாளரான சோரேன் கீர்க்கேகார்ட் தன்னுடைய நூலான இது / அது *(Either / or )* என்பதில் கூறும் அழகியல் நிலை வாழ்க்கை *(aesthetic Life)*, அறவியல் நிலை வாழ்க்கை *(Ethical life)*, கையறுநிலை *(despair)* என்ற மூன்று வகையான இருத்தலியல் சிந்தனையின் புனைவக்கம் செய்யப்பட்ட பிரதி *(text)* நன்கு அறியமுடிகின்றது.

## குறிப்புகள்

1. சுரேஷ் எம். ஜி, இஸங்கள் ஆயிரம் , ப.176.
2. ஸ்டான்ஃபோர்ட் தத்துவக் கலைக்களஞ்சியம் http://plato.stanford.edu/entries/kierkegaard/
3. ராஜதுரை எஸ் வி, இருத்தலியமும் மார்க்ஸியமும், பக்.130 -152.
4. மேலது ப.131
5. மேலது ப.132
6. மேலது பக். 132-133
7. மேலது ப.133

## துணை நின்றவை


1. சுரேஷ், எம். ஜி., இஸங்கள் ஆயிரம், 2017 (முதல் பதிப்பு), அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி - 621 310.
2. சுரேஷ், எம். ஜி., பால் மிஷெல் பூக்கோ அதிகாரத்தின் நுண் அரசியல், 2018 (இரண்டாவது மீளச்சு), அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி - 621 310.
3. நிஜந்தன், புதிய வெயிலும் நீலக் கடலும், 2008 (முதல் பதிப்பு), காவ்யா, சென்னை – 600 024.

4. ராஜதுரை, எஸ். வி. இருத்தலியமும் மார்க்ஸியமும், *2011 (முதல் பதிப்பு),* **விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர் -** *641 015.*

5. **ஸ்டான்ஃபோர்ட் தத்துவக் கலைக்களஞ்சியம்** *http://plato.stanford.edu/entries/kierkegaard/*